1993 ஏப்ரல் 13]

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற அறிக்கையை நான் பார்த்தேன். ஆனால் பெருமகளூர் மேல்நிலைப் பள்ளியில் ஒரு கட்டடம் இடிந்து அபாயகரமான சூழ்நிலையில் இருக்கிறது. அந்தப் பிள்ளைகள் பாதிக்கப்படக்கூடிய அளவில் மிக அவசரமான ஒரு விஷயமாக இருக்கின்ற காரணத்தால்தான் இதை நான் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் இந்த அறிக்கையிலே பெருமகளூர் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் இடிந்து போனது குறித்தே இல்லை. இடிந்து போனது உண்மைதான் என்றாலும் கூட அது குறித்து முழு விவரத்தையும் இந்த அவையில் தெரிவிக்காமல் நிதிநிலைப் பற்றாக்குறை குறித்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை உடனடியாக அவசரம், அவசியமாகக் கருதி அந்தக் கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கான அவசர நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த அறிக்கையைப் பெற்று அங்கே முன்னேற்றப் பணிக்கான வேலைகளை இந்த அரசு தொடரும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை பெற்று நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்வது அந்தப் பள்ளிக் கட்டிடம் இடிந்துபோய் அபாயகரமான நிலையில் இருக்கிறது. ஆகவே அந்த அபாயகரமான நிலையைத் தவிர்ப்பதற்காக உடனடியாக அந்த ஸ்பாட்டுக்கு விரைந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்த்து அந்தக் குழந்தைகளை வேறு இடத்திற்கு மாற்றியாவது ஏற்பாடு செய்து, அதற்கு மதிப்பீடு தயார் செய்து உடனடியாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மீண்டும் முயற்சிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை வைத்துக்கொண்டு நான் எதையும் இங்கே சொல்ல முடியாது. ஆகவே துறையின் மூலமாகத்தான் நான் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. எனவே அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

(ஆ) சங்கராபுரம் தொகுதி கல்வராயன் மலை, கோரப்பட்டு பகுதியில் சாலை பழுதுபட்டிருப்பதால் போக்குவரத்து பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு.

திரு. சி. இராமசுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சங்கராபுரம் தொகுதி கல்வராயன்மலை, கோரப்பட்டு பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ.செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

கள்ளக்குறிச்சியிலிருந்து சங்கராபுரம், புதூர், ராவுத்தநல்லூர், புதுப்பட்டு, ரங்கப்பனூர், மூலக்காடு, வஞ்சிக்குழி வழியாக கோரப்பட்டு வரையிலான தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புறநகர் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வந்தது. இத்தடத்தில் மூலக்காட்டிலிருந்து, கோரப்பட்டு வரையிலான பகுதிகளடங்கும். 15 கி.மீ. தூரச்சாலை மலை வழிச் சாலையாகும். கடந்த ஆண்டு மழை காரணமாக இச்சாலை மிக, மிக சேதமுற்று, பேருந்து இயக்கத்திற்கு சற்றும் ஏற்றதாக இல்லை. இதனால், பயணிகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இப்பகுதியில் பேருந்து இயக்குதல் தவிர்க்கப்பட்டு, தற்பொழுது, கள்ளக்குறிச்சியிலிருந்து சங்கராபுரம், ராவுத்தநல்லூர், புதுப்பட்டு, ரங்கப்பனூர், லக்கிநாயக்கன்பட்டி வழியாக மூலக்காடு வரை பேருந்து வசதி அளிக்கப்படுகிறது. மேற்கண்ட பழுதுபட்ட சாலை பேருந்து போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் சீரமைக்கப்பட்ட பின்புதான் மீண்டும் கோரப்பட்டு வரை பேருந்து வசதி அளிப்பதற்கு இயலும்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மூலக்காடு வரை போக்குவரத்து செல்கிறது. ஆனால் மூலக்காட்டிலிருந்து கோரப்பட்டு வரை கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் தூரத்தில் கடந்த 6 மாதமாக மலைவாழ் மக்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் அவதிப்படுகிறார்கள். மலைவாழ் மக்கள் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைத் தெய்வமாகக் கருதி வழிபாடு செய்பவர்கள். அவர்கள் கடந்த 6 மாதகாலமாக 25 கிலோமீட்டர் தூரம் நடந்துதான்

சங்கராபுரம், மூலக்காட்டுக்கு வருகிறார்கள். எனவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே போக்குவரத்து வசதி செய்து கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகிற இந்தப்பாதை கடந்த 6 மாத காலத்திற்கு முன்னால் பெய்த மழையின் காரணமாக பல்வேறு பள்ளங்கள் விழுந்திருக்கிற காரணத்தால் அங்கே பேருந்துகளை இயக்க முடியவில்லை. அது ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியிலிருந்து போடப்பட்டிருக்கிற சாலை. இப்போது ஊராட்சி ஒன்றியத்தில் நிதிப்பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் அந்தப் பாதையைச் செப்பனிட முடியவில்லை. ஆகவேதான் அங்கே பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாக ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக அந்தப் பாதையைச் செப்பனிட்டுக் கொடுப்பார்களேயானால் உடனடியாக பேருந்துகள் அங்கே இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாதை ஹைவேஸ்-க்கு சொந்தமான பாதையாகும். மூலக்காட்டிலிருந்து கோரப்பட்டுக்குச் செல்லும் பாதை. அது மான்கொம்பு, வஞ்சிக்குழி, அத்தியூர் போன்ற பகுதிகள் வழியாகச் செல்லக்கூடிய ஹைவேஸ் பாதையாகும். அது 6 மாதமாக பழுதுபட்டுக் கிடக்கிறது. அந்த மூலக்காடு வரை ஒரு பஸ்தான் செல்கிறது. அந்த மலையைச் சுற்றி 60 கிராமங்கள் இருக்கின்றன. அத்தனை பேர்களும் இறங்கி வந்து, மூலக்காட்டில் பஸ் ஏறுகிற நிலையில் காலையில் ஒரு பேருந்தும், மாலையில் ஒரு பேருந்தும்தான் அங்கே செல்கின்றன. எனவே அங்கே அதிக பேருந்துகளை விடச் செய்து மீண்டும் அந்தப் பாதையைப் போக்குவரத்துக்கு உகந்ததாய் வழி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மூலக்காடு வரையிலும் கூடுதலாகப் பேருந்துகளை இயக்குவதற்கு ஒரு வார காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.